தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 236/ந/2022
நாள் 30.12.2022

திரு. S. சந்திரன்,
வாணியம்பாடி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
வாணியம்பாடி நகராட்சி,
திருப்பத்தூர் மாவட்டம் – எதிர் மனுதாரர்

வாணியம்பாடி, கோவிந்தபுரம், அம்பலான் தெரு, கதவு எண்.35/725 என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. சந்திரன் என்பவரின் 18.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.11.2022 அன்று பெறப்பட்டு 236/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வாணியம்பாடி, கோவிந்தபுரம், அம்பலான் தெரு, கதவு எண்.35/725 என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. சந்திரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியைச் சார்ந்த மனுதாரர் திரு.S.சந்திரன் என்பவர் தனது 18.11.2022 நாளிட்ட மனுவில் தான் வாணியம்பாடி நகராட்சியில் மின்கம்பியாளராக பணிபுரிந்து 28.02.2020 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதாகவும் 17.02.2020 நாளிட்ட வாணியம்பாடி நகராட்சி ஆணையரின் செயல்முறைகளின் ஆணைப்படி, 01.01.2006 முதல், தான் பணிபுரிந்த மின்கம்பி உதவியாளர் பணியில் சாதாரண நிலை ஊதிய விகிதத்திலிருந்து தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் ஊதியம் மறுநிர்ணயம் செய்து அனுமதித்த வகையில் மேற்காணும் ஆணையரின் செயல்முறைகள் ஆணையின்படி ரூ.15,91,439/– ஒப்பளிப்பு செய்யப்படாமல், 33 மாதகாலமாக நிலுவையில் உள்ளதாக தெரிவித்து, அதனை வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்”.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.11.2022 நாளிட்ட கடிதம் மூலம் வாணியம்பாடி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

வாணியம்பாடி நகராட்சி ஆணையாளர் தனது 07.12.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“திரு.எஸ்.சந்திரன் என்பவர் வாணியம்பாடி நகராட்சியில் மின்கம்பி உதவியாளராக பணியாற்றி 17.09.2012–ல் மின்கம்பியாளராக பதவி உயர்வு பெற்று, 29.02.2020 ஆம் தேதி வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றுள்ளார்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.11627/2019/எப்3, நாள்.02.12.2019 ஆம் தேதிய சுற்றறிக்கையில் மின்கம்பி உதவியாளர் (Wiremen Helper) 01.01.2006–க்கு முன் தேர்வு நிலை அடைந்தவர்களுக்கு 01.01.2006–ல் ஊதிய விகிதம் 9300–34800+4200 தர ஊதியம் பொருந்தும் என்று தெளிவுரை அளித்ததன்பேரில் வாணியம்பாடி நகராட்சி அலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.1885/2018/சி1, நாள்.17.02.2020–ல் மனுதாரருக்கு 01.01.2006 ஆம் தேதி முதல் ஊதிய விகிதம் 9300–34800+4200 தர ஊதிய விகிதத்தில் ஊதிய மறு நிர்ணயம் செய்து ஊதிய திருத்தத்தால் ஏற்படும் வித்தியாச தொகை ரூ.15,91,439/–ஐ வழங்க உத்தரவிடப்பட்டது.

மேலும் மனுதாரர் திருத்திய ஊதிய விகிதத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் பெற்று வருகிறார்.

வாணியம்பாடி நகராட்சி அலுவலக அறிவிப்பில் ந.க.எண்.1885/2018/சி1, நாள்.06.12.2022–ல், 2020 ஆம் ஆண்டுமுதல் கொரோனா நோய் தொற்று காலகட்டமாக இருந்ததால் வரிவிதிப்புதாரர்களிடமிருந்து தொடர்ச்சியாக வரிவசூல் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, நிலுவைத்தொகை வழங்கப்படாமல் இருந்துள்ளது. ஆகையால் நகராட்சியின் நிதிநிலைக்கு ஏற்ப மேற்காணும் தொகை பகுதி தொகையாக வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டது.

மேலும் மனுதாரருக்கு ஓய்வூதிய காலத்திற்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து பணப்பயன்களும் (சேமநல நிதி, சிறப்பு சேமநலநிதி மற்றும் மனுதாரரின் இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பை காசாக்கியும்) தற்பொழுது வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய மறு நிர்ணய வித்தியாச நிலுவைத் தொகையை வாணியம்பாடி நகராட்சியின் நிதிநிலையை பொறுத்து பகுதி தொகையாக முழுவதும் வழங்கப்படும் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் வாணியம்பாடி நகராட்சி ஆணையரும் 28.12.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.S.சந்திரன், 28.12.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்பித்துள்ளார்:

“வாணியம்பாடி நகராட்சியில் மின் கம்பியாளராகப் பணியாற்றி கடந்த பிப்ரவரி 2020–ல் பணி ஓய்வு பெற்றேன். பணியில் இருந்தபோது மின் கம்பி உதவியாளர் பதவியிலிருந்து மின் கம்பியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டது. அதற்கான திருத்திய ஊதியத்திற்கான நிலுவைத் தொகை ரூபாய் 15,91,439/– பணி ஓய்வு பெற்று 33 மாதங்களாகியும் எனக்கு அளிக்கப்படவில்லை. மேற்கண்ட பணப்பயன்கள் எனக்கு அளிக்கப்படாததால் எனது

குடும்பத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, வாணியம்பாடி நகராட்சியிலிருந்து எனக்கு அளிக்கப்பட வேண்டிய மேற்கண்ட ஊதிய நிலுவைத் தொகையை நகராட்சியால் விரைவில் அளித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான வாணியம்பாடி நகராட்சி ஆணையர் மற்றும் மேலாளராக பணிபுரியும் திரு. த.ஜெயப்பிரகாஷ் ஆகியோர் 28.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

''வாணியம்பாடி நகராட்சியில் மின் கம்பியாளராகப் பணியாற்றி கடந்த பிப்ரவரி 2020–ல் பணி ஒய்வு பெற்ற திரு. எஸ். சந்திரன் என்பவர் மின் கம்பி உதவியாளர் பதவியிலிருந்து, 17.9.2006 முதல் மின் கம்பியாளராகப் பதவி உயர்வு பெற்றார். எனவே, அவரது ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டு, திருத்தத்தால் ஏற்படும் வித்தியாசத் தொகையான ரூபாய் 15,91,439/– நகராட்சியில் நிதியின்மை காரணமாக இன்னும் நகராட்சியால் மனுதாரருக்கு அளிக்கப்படவில்லை. எனினும் நகராட்சியின் நிதிநிலைமை மேம்படுத்தப்பட்டு, மனுதாரருக்கு மாதம் ரூபாய் 2 இலட்சம் வீதம் 8 மாத காலத்தில் அவருக்கு அளிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை நகராட்சியால் வழங்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், வாணியம்பாடி நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் மேலாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து பணப்பயன்களும் வழங்கப்பட்டுள்ளது என்றும், வாணியம்பாடி நகராட்சியில் மின்கம்பியாளர் பணியிலிருந்து 29.02.2020 அன்று ஒய்வு பெற்ற மனுதாரர் திரு.S.சந்திரன் என்பவர் தனது 18.11.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் 01.01.2006 முதல்,மின்கம்பி உதவியாளர் பணியில் தேர்வு நிலை ஊதியத்தில் மறு நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட ஆணையின்படி, 01.01.2006 முதல் ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டு, மேற்படி ஊதிய திருத்தத்தால் ஏற்படும் வித்தியாச தொகையில் 01.08.2010 முதல் 31.03.2013 வரையில் மிகையாக வழங்கப்பட்ட ரூ.17,070/– தொகையினை பிடித்தம் செய்து, மீதமுள்ள தொகை ரூ.15,91,439/– மனுதாரருக்கு வழங்க நகராட்சியின் ஆணையாளரால் 17.02.2020 அன்று ஆணையிடப்பட்டுள்ளது என்று தெரிவித்து, 29.02.2020 அன்று ஒய்வு பெற்றபின், 33 மாதங்கள் கடந்தும் மேற்காணும் ஊதியத் தொகை ரூ 15,91,439/– வழங்கப்படாமல் உள்ளதாக புகாராக தெரிவித்துள்ளார்.

மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து பணப்பயன்களும் வழங்கப்பட்டுள்ளது என்றும், வாணியம்பாடி நகராட்சியில் 29.02.2020 அன்று மின்கம்பியாளராக பணிபுரிந்து ஒய்வு பெற்ற மனுதாரருக்கு 01.01.2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவேண்டிய ஊதிய மறுநிர்ணய வித்தியாச தொகை ரூ.15,91,439/–ஐ, 2020 ஆம் ஆண்டில் கொரோனா நோய் தொற்று காரணமாக நகராட்சிக்கு வரவேண்டிய வரிதொகை இனங்கள் வசூலிக்கப்படாததால், மனுதாரருக்கு மேற்படி தொகையினை ஒப்பளிப்பு வழங்க இயலவில்லை என்பதை ஆவணங்களின் மூலம் அறிய வருகிறது. இருப்பினும், மனுதாரர் பணியிலிருந்து ஒய்வு பெற்றுள்ள நிலையில் அவரது குடும்ப சூழ்நிலையையும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. மனுதாரர் பணிபுரிந்த காலத்திற்குரிய ஊதியத் தொகை பெறுவது அவரது உரிமையாகும். ஊதியத்தினை ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டியது நகராட்சி அலுவலர்களின் கடமையாகும். ஊதியம் வழங்குவதில் எவ்வித நிலுவைத் தொகையும் வைத்திருக்கக்கூடாது.

இருப்பினும், வாணியம்பாடி நகராட்சியில் நிதிப்பற்றாக்குறை இருப்பதாக நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதை கருத்தில் கொண்டும் வாணியம்பாடி நகராட்சி ஆணையர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, நகராட்சியின் நிதிநிலைமையினை மேம்படுத்தி, மனுதாரருக்கு அளிக்கப்பட வேண்டிய ஊதிய மறு நிர்ணய வித்தியாச தொகையான ரூ.15,91,439/—ஐ மாதம் ரூ.2,00,000/— (ரூபாய் இரண்டு இலட்சம்) வீதம் 8 மாத காலத்திற்குள் நிலுவைத் தொகை முழுவதையும் அளித்திடுமாறு வாணியம்பாடி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதில் தாமதம் தவிர்க்கப்பட அறிவுறுத்தப்படுகிறது.

இனி வருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாவண்ணம், நகராட்சியின் நிதிஆதாரங்களை மேம்படுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வாணியம்பாடி நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30—ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.சந்திரன்,
கதவு எண்.35/725, அம்பலான் தெரு,
கோவிந்தபுரம், வாணியம்பாடி – 635 751.

2) ஆணையாளர், வாணியம்பாடி நகராட்சி,
வாணியம்பாடி – 635 752.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/12/22
செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032